DEREK PRINCE
MINISTRIES - INDIA

Free Copy



நம்பிக்கை - PART 1

நம்பிக்கை அத்தியாவசியமானது

“ஜீவனுள்ள இடத்தில், நம்பிக்கையுண்டு” என்ற பழமொழியை நீங்கள் கேட்டிருக்கலாம். அந்த பழமொழியில் மிகுந்த உண்மையுண்டு. ஆனால் அதின் எதிர்மறையும் உண்மையே: “நம்பிக்கையுள்ள இடத்தில் ஜீவனுண்டு.” மனித அனுபவத்தில், நம்பிக்கையின்மை மிகவும் வேதனை அளிக்கக்கூடிய நிலை என்பது எனது கருத்து - இன்று நம்முடைய உலகில், எண்ணப்படாத கோடிக்கணக்கானோர் நம்பிக்கையற்றவர்களாகவே உள்ளனர். ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம், நீங்களும் நானும் நம்பிக்கையற்றவர்களாக இருக்க வேண்டியதில்லை!

வேதாகமத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உண்மையான நம்பிக்கை, ஒரு நபருக்கு வாழ்வில் முழுவதும் புதுமையான பார்வையை ஏற்படுத்த கூடும். அதனால் தான், எனது ஐந்து பகுதிகள் கொண்ட இத்தொடருக்கு அந்த கருப்பொருளை நான் தேர்ந்தெடுத்துள்ளேன். இச்செய்திகளின் வழியாக நான் பகிர்ந்துக்கொள்ளும் கருத்துக்கள் நம்பிக்கை என்ன என்பதையும், அது எவ்வளவு முக்கியமானது என்றும், அதை எப்படி பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் நீங்கள் அறிந்துக்கொள்ள உதவும் என நம்புகிறேன்.

நித்திய அஸ்திபாரங்கள்

நம்பிக்கையெனும் கருப்பொருளுக்கு முன்னுரையாக, நாம் 1 கொரிந்தியர் 13ம் அதிகாரம் 13ம் வசனத்தை பார்க்கலாம். அங்கே பவுல் கூறுகிறார்:

> *இப்போதும் விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.*

கிறிஸ்தவ விசுவாசத்தின் மூன்று மிகப்பெரிய, நிலைத்திருக்கும் உண்மைகளை அவ்வசனத்தில் பவுல் நமக்கு முன்வைக்கிறார். வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் பெருபாலான காரியங்கள் வந்து செல்லலாம். அதில் சிலது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ குறிப்பிட்ட சூழ்நிலைக்கோ முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம். ஆனால் என்றென்றைக்கும் நிலைத்திருப்பவை, இம்மூன்று உண்மைகள் ஆவன: விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு.

விசுவாசத்தை குறித்தும், அன்பை குறித்தும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அதிக பிரசங்கங்களை கேட்டிருக்கிறார்கள். ஆனால் அநேகருடைய சூழ்நிலைகளில், அவர்கள் நம்பிக்கையை குறித்து, குறைவாகவே அறிந்துள்ளார்கள். தேவனிடத்திலிருந்து எனக்கு உதவி தேவைப்பட்ட ஒரு சூழ்நிலையில் பல ஆண்டுகளுக்கு முன்பதாக இதுவே என்னுடைய நிலையாகவும் இருந்தது. விசுவாசத்தைக் குறித்து அநேக செய்திகளை கேட்டிருந்தேன். அன்பை குறித்து சிலர் பிரசங்கிப்பதை நான் கேட்டிருந்தேன். ஆனால் அந்த சூழ்நிலையில் எனக்கு தேவையான செய்தி நம்பிக்கை என்பதாக இருந்தது. எனக்குள் இருந்த அத்தேவையை சந்திக்க பரிசுத்த ஆவியானவர் என்னை நேரடியாக வேதத்துக்குள் அழைத்துச் செல்ல வேண்டியதாக இருந்தது, ஏனென்றால் நம்பிக்கையைக் குறித்து எந்த செய்திகளும் இருந்ததாக நான் அறியவில்லை. தேவனுடைய வார்த்தையில் தான் பரிசுத்த ஆவியானவர் எனது தேவையை சந்தித்தார்.

எனது அனுபவத்தின் விளைவாகவும், நம்பிக்கைக்கான எனது ஆழ்ந்த தேவையின் நிமித்தமாகவும் மக்கள் நம்பிக்கையின் முக்கியத்துவத்தை புரிந்துக்கொள்ள வேண்டும் என்ற பாரம் எனக்கு உண்டு. நான் சென்னது போல, இவ்வாண்டு நான் இந்தக் கருப்பொருளை குறித்து பகிர்ந்து கொள்ளும் யாவும், நம்பிக்கை இன்னதென்றும், அது எவ்வளவு முக்கியமென்றும், அதை எப்படி பெற்றுக்கொள்ள முடியுமென்றும் நீங்கள் அறிந்துக்கொள்ள உதவும் என நம்புகிறேன்.

நம்பிக்கை அத்தியாவசியமானது

விசுவாசம் மற்றும் அன்பை பராமரிக்க நம்பிக்கை அவசியமானது. இத்தொடரில் நாம் முன்னேறி செல்லும் போது, நம்பிக்கை இல்லை என்றால், நமது விசுவாசம் கசிந்து, நம்முடைய அன்பு தோற்றுப்போகும் என்பதை பல்வேறு விதங்களில் உங்களுக்கு காண்பிப்பேன். ஆகவே நம்பிக்கை என்பது நாம் தேர்வு செய்யக்கூடிய ஒன்றல்ல. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் நிறைவுக்கு இது அத்தியாவசியமான பொருளாகும்.

நாம் முன்னேறி செல்லும் போது, நம்பிக்கை இல்லை என்றால், நமது விசுவாசம் கசிந்து, நம்முடைய அன்பு தோற்றுப்போகும்.

நாம் முன்பு கூறியது போல மக்கள் அதிகம் பயன்படுத்தும் ஒரு பழமொழி உண்டு: "எங்கே ஜீவன் உண்டோ அங்கே நம்பிக்கையும் உண்டு." அதில் அதிக உண்மையுண்டு என்றே நம்புகிறேன். ஆனால் அதற்கு எதிர்மறையானது உண்மையே என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன் : "எங்கே நம்பிக்கை உண்டோ அங்கே ஜீவனும் உண்டு." இதற்கு மாறாக, "நம்பிக்கை இல்லாத இடத்தில் ஜீவனும் இல்லை." மனித அனுபவத்தில் நம்பிக்கையின்மை மிகவும் வேதனையான நிலை என்பதே எனது கருத்தாகும். நம்பிக்கையற்றவர்களாய் இருப்பதை விட வருத்தம் அளிக்கக்கூடிய ஒரு நிலையை என்னால் சிந்தித்துப்பார்க்க முடியவில்லை - இன்று நம்முடைய உலகில் கோடிக்கணக்கானோர் நம்பிக்கையற்ற மக்களாகவே இருக்கின்றனர். ஆனால் நீங்களும் நானும் நம்பிக்கையற்றவர்களாய் இருக்கத் தேவையில்லை.

ஒன்றிணைந்து செயல்படுதல்

நம்பிக்கையை குறித்து நம்முடைய புரிந்துக்கொள்ளுதலை விரிவடையச் செய்ய நாம் 1 தெசலோனிக்கேயர் 1ம் அதிகாரம் 2-4 வசனங்களை பார்க்கலாம். இந்தப்பகுதியில் தேவனுடைய ஜனங்களாகிய தெசலோனிக்கேய கிறிஸ்தவர்கள் தங்கள் முழு சுதந்தரத்தையும் அனுபவிப்பதை குறித்த ஒரு சித்திரத்தை பவுல் முன் வைக்கிறார். அவர்களுக்கு விசுவாசம் உண்டு, அவர்களிடத்தில் நம்பிக்கையும் உண்டு, அவர்களிடம் அன்பும் உண்டு. அவர்களுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கும் போது அவர் இம்மூன்று நல்லொழுக்கங்களையும் குறிப்பிடுகிறதை கவனியுங்கள். பவுல் கூறுகிறது:

> *தேவனுக்குப் பிரியமான சகோதரரே, உங்கள் விசுவாசத்தின் கிரியையையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து, நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து, எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்கு குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்.*

தெசலோனிக்கேயாவில் இருந்த அக்கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய நிலை, அவர்கள் மெய்யாகவே தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் என்பதை பவுலுக்கு நிரூபித்தது. அவர்களுக்குள் அம்மூன்று நிலைத்திருக்கும் உண்மைகளை அவர் கண்டார்: விசுவாசம், அன்பு மற்றும் நம்பிக்கை. அவர்களை புகழும்போது, அவ்வுண்மைகள் ஒவ்வொன்றையும் குறித்த விசேஷத்தை விவரிக்க, அவர் ஒரு தனிப்பண்புள்ள வார்த்தையை பயன்படுத்துகிறார். அவர் விசுவாசத்தின் கிரியைக் குறித்தும், அன்பின் பிரயாசத்தைக் குறித்தும், நம்பிக்கையின் திடமான பொருமையையும் குறித்து பேசுகிறார். பின்வரும் பகுதிகளில் அந்த சொற்றொடர்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே கவனித்து அவைகளை தியானிப்போம்.

முதலாவது விசுவாசம் கிரியைகளினால் அல்லது செயல்களினால் வெளிப்படுத்தப்பட வேண்டும். கிரியை செய்யாத விசுவாசம் செத்த விசுவாசம் ஆகும். இதை குறித்து கலாத்தியர் 5:6ல் பவுல் கூறுகிறது இதுதான் :

> *கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது. அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும்.*

இது அன்பின் மூலம் கிரியை செய்யும் விசுவாசம் என்பதை கவனியுங்கள். இதே காரியத்தை யாக்கோபின் நிரூபம் வேறு விதமாக கூறுகிறது. யாக்கோபு 2:26ல் நாம் வாசிக்கிறோம்:

> *அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.*

விசுவாசத்தின் தனித்தன்மையான வெளிக்காட்டுதல் கிரியை ஆகும். இது ஒரு செயல். நம்முடைய விசுவாசத்தின் விளைவாக ஏதோவென்றை செய்வதாகும். இச்செயல் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும். கிரியையில்லாத விசுவாசம் செத்த விசுவாசமாயிருக்கிறது.

இப்பகுதியின் ஆரம்பத்திலே நாம் பார்த்த வசனத்தில், தெசலோனிக்கேய கிறிஸ்தவர்களோடு பவுல் அவர்களுடைய "அன்பின் பிரயாசத்தை" குறித்துப் பேசுகிறார். "பிரயாசம்" என்கிற வார்த்தை கடுமையான உழைப்பை குறிக்கும். இது உண்மையான அன்பின் தன்மையல்லவா ? உண்மையான அன்பு உட்கார்ந்திருந்து பரிதாபப்படுகிற ஒன்றல்ல. உண்மையான அன்பு கிரியையில் குதிக்கும். அது தன் சட்டையை மடித்துக் கொண்டு தொட்டரியக்கூடிய செயலில் இறங்கும். அன்பு என்பதில் பிரயாசத்தின் விலைக்கிரயம் உண்டு. அது ஒரு கிரயத்தை கேட்கும். பல நேரங்களில் இது

கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது

தூக்கமின்மை மற்றும் களைப்பு என்ற கிரயமாகும். அன்பு பிரயாசப்படுகிறது. அது செயலற்றுக் கிடக்கும் வெறும் ஓர் உணர்வு அல்ல. அன்பு என்பது, மற்றவர்கள் சார்பில் தியாகமான உழைப்பை வெளிப்படுத்த வைக்கும் ஒரு செயலாற்றத் தூண்டும் சக்தியாக இருக்கிறது.

அதற்குபின் மேற்கூறப்பட்ட வசனத்தில் நம்பிக்கையை குறித்த சொற்றொடருக்கும் நாம் வருகிறோம். அந்த தெசலோனிக்கேய கிறிஸ்தவர்களை பார்த்து "(உங்கள்) நம்பிக்கையின் பொறுமை" அல்லது உறுதி என்று பவுல் கூறுகிறார். ஆகவே நம்பிக்கை உறுதி, பொறுமை, சகிப்பு ஆகியவற்றை உருவாக்குகிறது என்று காண்கிறோம். உறுதி, பொறுமை மற்றும் சகிப்பு ஆகிய தன்மைகளில்லாமல் முதல் இரண்டு குணாதிசயங்களாகிய விசுவாசம் மற்றும் அன்பின் பயன்களை நாம் எளிதாக இழக்க முடியும்.

நம்பிக்கையின் ஊற்று

நம்பிக்கை எப்படி வருகிறது ? இப்படிப்பட்ட உண்மையான மற்றும் அத்தியாவசியமான இத்தகைய விசுவாசத்தை நாம் எப்படி பெறமுடியும். நம்பிக்கை, புதிய பிறப்பின் நேரடி விளைவு என்பதே இதற்கு பதில். இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியின் மூலம் நாம் மறுபிறப்பு அடைவதின் நேரடி விளைவாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவில் வைக்கும் பொதுவான விசுவாசத்தின் மூலம் இது வராமல், குறிப்பாக அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் வைக்கும் விசுவாசத்தினால் உண்டாகும். 1 பேதுரு 1ம் அதிகாரம் 3ம் வசனத்தில் பேதுரு சொல்லும் காரியத்தினால் இவ்வுண்மை உறுதி செய்யப்படுகிறது.

இயேசு கிறிஸ்துவில் வைக்கும் பொதுவான விசுவாசத்தின் மூலம் இது வராமல், குறிப்பாக அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் வைக்கும் விசுவாசத்தினால் உண்டாகும்.

> *நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.*

"இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே... ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி" என்ற அந்த முக்கியமான வாக்கியத்தை கவனியுங்கள். நம்முடைய சார்பாக இயேசுகிறிஸ்து மரித்ததையும், தேவனுடைய வல்லமையினாலே அவர் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்ததையும் நாம் விசுவாசிக்கும் போது நாம் மறுபிறப்பு அடைகிறோம்; நமக்கு ஒரு புதிய பிறப்பு உண்டாகிறது. நாம் ஒரு ஜீவனுள்ள நம்பிக்கையினுள் பிறப்படைகிறோம். மரித்த இறையியல் அல்ல மாறாக, இது ஜீவனுள்ள சிலிர்க்க வைக்கும் ஒரு நம்பிக்கை.

மரித்தோரிலிருந்து இயேசுகிறிஸ்து எழுந்ததின் மூலம் நம்பிக்கை நமக்கு வருகிறது. எல்லா நம்பிக்கைக்கும் இதுவே இறுதியான சரித்திர அடிப்படை என்பதை நாம் தெளிவாக புரிந்துக்கொள்ள வேண்டும். உண்மையான நம்பிக்கைக்கு அடித்தளம் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஆகும். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லாமல் வாழ்வு நம்பிக்கையற்றதாய் இருக்கும். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே நம்மை ஜீவனுள்ள நம்பிக்கைக்குள்ளாக கொண்டுவருகிறது.

நம்பிக்கை தொடர்கிறது

இந்த நம்பிக்கை நம்முடைய இரட்சிப்பின் நிறைவு வரையில் தொடர வேண்டும் என்பதை உணர்வது மிக முக்கியம். முன்பதாக 1 பேதுரு-விலிருந்து ஒரு வசனத்தை நாம் பார்த்தோம். அதே நிருபத்தில் முதலாம் அதிகாரத்தில் மிக முக்கியமான இன்னொரு சத்தியத்தைப் பார்க்கிறோம். அதே முதலாம் அதிகாரத்தில் 13ம் வசனத்தில் இதை காண்கிறோம்.

> *ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங்கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.*

பேதுரு இங்கே என்ன கூறுகிறார் என்றால், இரட்சிப்பின் செயல்தொடர் இன்னும் நிறைவடையவில்லை. இயேசுகிறிஸ்து வெளிப்படுவதினால் இது இறுதியில் நிறைவடையும். அதுவரையில் நீங்களும் நானும் இனி சம்பவிக்கயிருக்கும்

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி secretary@derekprince.in அல்லது அலைபேசி 9585538202 தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.

உங்கள் கவனத்திற்கு!!!

உங்கள் விலாசம் மாறும் பொழுது தயவு எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

இன்னும் தேவையா ?

○ ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.

○ தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.

○ முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்.

பதிவு செய்க !

○ தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.

○ ஈமெயில் மூலமாக அனுப்பவும்.

○ கடிதம் மூலமாக அனுப்பவும்.

ISSUE #016

See over for address details...

அந்த எதிர்கால நிகழ்வின் மீது நம்முடைய நம்பிக்கையை முழுமையாக பதிக்க வேண்டும். வேறுவிதமாக சொன்னால், எல்லா கிறிஸ்தவ நம்பிக்கையின் கவனமும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையும், அவர் வரும்போது அவரை குறித்த வெளிப்பாடையும் சார்ந்ததாக இருக்கிறது. இவ்வாழ்க்கையின் ஊடாக நாம் கடந்து செல்லும்போது, பேதுருவினுடைய இவ்வார்த்தைகளை நாம் கடைபிடிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் மகிமையான வருகையின் மூலமாய் நமக்கு உண்டாகும் கிருபை மற்றும் ஆசீர்வாதத்தின் மீது நம்முடைய நம்பிக்கையை நாம் முழுமையாக பதிக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் மகிமையான வருகையின் மூலமாய் நமக்கு உண்டாகும் கிருபை மற்றும் ஆசீர்வாதத்தின் மீது நம்முடைய நம்பிக்கையை நாம் முழுமையாக பதிக்க வேண்டும்.

முடிவு வரை

இந்த முக்கியமான கோட்பாடை போலவே, எபிரெயரின் எழுத்தாளர் நம்பிக்கையின் இன்னொரு முக்கியமான தன்மையை எபிரெயர் 3:6ல் வெளிக்கொணருகிறார்:

> *கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்.*

மறுபடியும் இந்த நம்பிக்கை கடைசி வரைக்கும் காக்கப்பட வேண்டும் என்பதை கவனியுங்கள். அந்த நிகழ்வினால் நம்முடைய நம்பிக்கை நிறைவடையும் வரைக்கும், நீங்களும் நானும் நம்புவதை விட்டுவிட முடியாது. அதினால் தான் எபிரெயரின் எழுத்தாளர் மேற்காணும் ஆலோசனையை கூறுகிறார். தேவனுடைய ஜனங்களின் ஒரு பகுதியாக இருப்பதற்கு நம்முடைய நம்பிக்கையில் நாம் உறுதியாய் தரித்திருந்து அதில் கடைசி வரை மேன்மைபாராட்டுகிறவர்களாய் நிலைத்திருக்க வேண்டும்.

நாம் வைக்க வேண்டிய நம்பிக்கை வெறும் ஒரு உள்ளான செயலற்ற எதிர்பார்ப்பு அல்ல. மாறாக இது பலமுள்ளதும், மிகுந்த உறுதியுள்ளதாயும் இருக்கிறது. இது பெருமைபாராட்டும் ஒரு நம்பிக்கை - தன்னில்தான் அல்ல - தேவனில் மேன்மைபாராட்டுகிறது.

தேவனுடைய ஜனங்களின் ஒரு பகுதியாக இருப்பதற்கு நம்முடைய நம்பிக்கையில் நாம் உறுதியாய் தரித்திருந்து அதில் கடைசி வரை மேன்மை பாராட்டுகிறவர்களாய் நிலைத்திருக்க வேண்டும்.

பெருமை அல்லது மேன்மைபாராட்ட நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் கட்டளை, நம்முடைய நம்பிக்கையின் அறிக்கையை நிலைநாட்டும் அக்கட்டளை தேவன் நமக்கு ஏற்படுத்தியுள்ள காரியத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. அது நம்பிக்கையுடன் இணைந்து செல்கிறது, நம்பிக்கை விசுவாசத்துடனும், அன்புடனும் இணைந்து செல்கிறது. நம்முடைய நம்பிக்கையின் இந்த உறுதியாக மேன்மைபாராட்டலை, ஆண்டவராகிய இயேசு வருவதைக் குறித்த நம்முடைய எதிர்பார்ப்பின் தொடர் அறிக்கையை, நம்முடைய வாழ்வின் முடிவு வரையிலோ இயேசுவின் வருகை வரையிலுமோ நாம் காத்துக்கொள்ள வேண்டும்.

நம்பிக்கை கிடைக்கக்கூடும்

இந்த வருஷத்தின் போதனைக் கருப்பொருளின் முதல் பகுதியை ஒரு கேள்விக்கேட்டு நான் முடிவுக்கு கொண்டுவரட்டும். உங்களுக்கு நம்பிக்கை உண்டா ? இந்த கருப்பொருளின் வேதாகம ஆராய்வில் நாம் கண்டடைந்த அந்த துடிப்பான நம்பிக்கை உங்களுக்குள் இருக்கிறதென்று நீங்கள் உண்மையாய் சொல்ல முடியுமா ? அல்லது என் கண்களை பரிசுத்த ஆவியானவர் திறக்கும் முன் நான் இருந்த அதே நிலையில் நீங்களும் இருக்கிறீர்களா ?

அந்த கேள்விக்கான பதில் நிச்சயமற்றதாய் இருந்தால், நாம் இணைந்து இப்போது செயல்படலாம். என்னோடு ஜெபிக்கும் படி உங்களை அழைக்கிறேன் - நம்முடைய இருதயத்தில் ஜீவனுள்ள நம்பிக்கையை கொண்டுவர தேவனை நாம் கேட்போம். என்னோடு இணைவீர்களா ?

ஆண்டவரே, எனக்கு தேவையான ஜீவனுள்ள நம்பிக்கையை இந்நேரத்தில் என்னிடத்தில் உண்டாயென்ற நிச்சயம் எனக்கு இல்லை. உம்முடைய வார்த்தையில் நான் இதுவரை கண்டதிலிருந்து அந்த நம்பிக்கை என் வாழ்வில் ஒரு வல்லமையான சக்தியாக இருக்கமுடியுமென்று நான் காண்கிறேன். இன்றைக்கு எனக்கு அது வேண்டும் ஆண்டவரே. என்னுடைய இருதயத்திற்குள் அந்த உண்மையான நம்பிக்கையை உயிர்பெறச் செய்யும் செயல்தொடரை இப்போதே எனக்குள் துவக்கும். நன்றி ஆண்டவரே. ஆமென்.

உங்கள் விபரம்

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538205
1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017

Derek Prince Ministries - India

www.derekprince.in